செ.வெ.எண்:45 நாள்: 21.02.2019

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, கரூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், **2019** ன் தொடர்ச்சியாக **31.01.2019** அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது**.** இந்நிலையில், கரூர் மாவட்டத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்ட வாக்காளர்கள் குறிப்பாக **01.01.2019**ந் தேதியினை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்ட தகுதியான நபர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காமல் விடுபட்டு இருப்பின், விடுபட்ட நபர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரினை சேர்த்திடவும், வாக்காளர்கள் தங்களது பெயர் சேர்க்கப்பட்ட விவரங்களை அறிந்துகொள்ளவும் ஏதுவாக சிறப்பு முகாம் எதிர் வரும் **23.02.2019** மற்றும் **24.02.2019** ஆகிய தினங்களில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெறவுள்ளது**.**

மேற்படி சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ள நாட்களில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் தொடர்பாக படிவங்கள் பெறவுள்ளனர். எனவே, பொதுமக்கள் **23.02.2019** மற்றும் **24.02.2019** ஆகிய தினங்களில் அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் நடைபெறவுள்ள சிறப்பு முகாமில் மனுக்கள் அளித்து பயனடையுமாறு கரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு.த.அன்பழகன்,** இ.ஆ.ப அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.